பொதுப்பணிகள் – கல்லூரிக் கல்வி – தமிழ்நாடு அமைச்சுப் பணி – கருணையடிப்படையில் பணிநியமனம் – மன்னார்குடி, மன்னை இராஜகோபாலசுவாமி அரசு கலைக் கல்லூரி – திரு.ம.சுந்தரராஜன், இளநிலை உதவியாளர் – பணிவரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

உயர்கல்வி (ஜி2) துறை

அரசாணை (3டி) எண்.9

நாள் 01.10.2020.
சார்வரி வருடம், புரட்டாசி–15,
திருவள்ளுவர் ஆண்டு, 2051.

படிக்கப்பட்டவை:–

1. கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் கடிதங்கள் ந.க.எண்.10608/பி1/2018, நாள்.16.12.2019 மற்றும் 21.03.2020.
2. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு (க்யூ) துறை, நாள்23.01.2020.

----

ஆணை :–

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் மன்னார்குடி, மன்னை இராஜகோபாலசுவாமி அரசு கலைக் கல்லூரியில் தாவரவியல் உதவிப்பேராசிரியராக பணிபுரிந்து பணியிலிருக்கும் போது 30.09.2016 அன்று இயற்கையெய்திய திருமதி.ப.கவிதா என்பவரது கணவரான திரு.ம.சுந்தரராஜன் என்பவருக்கு 07.02.2018 முற்பகல் முதல் மன்னார்குடி, மன்னை இராஜகோபாலசுவாமி அரசு கலைக் கல்லூரியில் பணிநியமனம் வழங்கப்பட்டு இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருகிறார் என்றும், அன்னார் பிறந்த தேதி 09.04.1976 என்றும், பணி நியமனத்தின்போது எஸ்.எஸ்.எல்.சி. தேர்ச்சி பெற்றுள்ளதாலும், இளநிலை உதவியாளர் பதவிக்குரிய முழுத்தகுதி பெற்றுள்ளதாலும், உரிய வயதினை நிறைவு செய்துள்ளதாலும், அன்னாரின் பணி நியமனத்திற்கோ, வயது வரம்பிற்கோ விதித் தளர்வாணைகள் பெற வேண்டிய நிலை எழவில்லை எனவும், அரசாணை (நிலை) எண்.80, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1) துறை, நாள்.02.03.2016–க்கு, முன்னர் கருணையடிப்படையில் பணியமர்த்தப்பட்ட இளநிலை உதவியாளர் / தட்டச்சர்களின் பணியினை நியமன அதிகாரிகளால் வரன்முறை செய்து செயல்முறை ஆணை வெளியிடுமாறு அறிவுறுத்தப்பட்டது என்றும், திரு.ம.சுந்தரராஜன் என்பவர் 07.02.2018 முற்பகல் முதல் கருணையடிப்படையில் பணியில் சேர்ந்ததனால் அன்னாரது பணியானது அலுவலகத் தலைவரால் வரன்முறை செய்யப்படவில்லை என்றும், எனவே தனியர் திரு.ம.சுந்தரராஜன் என்பவரின் இளநிலை உதவியாளர் பணியை 07.02.2018 முற்பகல் முதல் வரன்முறை செய்து ஆணை வழங்குமாறு கல்லூரி கல்வி இயக்குநர் அரசை கேட்டுக்கொண்டுள்ளார்.

2. கல்லூரிக் கல்வி இயக்குநரின் கருத்துருவினை நன்கு ஆய்வு செய்த அரசு தமிழ்நாடு அமைச்சுப் பணியில், கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக, மன்னார்குடி, மன்னை இராஜகோபாலசுவாமி அரசு கலைக் கல்லூரியில் பணிபுரியும் திரு.ம.சுந்தரராஜன் என்பவரது பணியினை இளநிலை உதவியாளர் பதவியில் நியமனம்

செய்யப்பட்ட நாளான 07.02.2018 முற்பகல் முதல் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு, முன்தேதியிட்டு அவரது பணி வரன்முறைப் படுத்தப்படுவதால் தனியர், ஆண்டு ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதிய நிலுவைகள் ஏதுமிருப்பின் விதிகளின்படி அவற்றை பெற்றிட தகுதியுடையவராகிறார். மேலும் இதனை தனியரின் பணிப் பதிவேட்டில் பதிவுகள் மேற்கொள்ள நியமன அலுவலர் அறிவுறுத்தப்படுகிறார்.

3. இவ்வரசாணை தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் அ.சா.கு.எண். 1729 /ட்டி1/2020, நாள்.05.02.2020 மற்றும் பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறையின் அ.சா.கு.எண்.5205/ஜி2/2020 நாள்.13.02.2020–ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

அபூர்வா
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
கல்லூரிக் கல்வி இயக்குநர் (மு.கூ.பொ), சென்னை-6.
சம்பந்தப்பட்ட தனியர் (கல்லூரிக் கல்வி இயக்குநர் வழியாக)
சம்பந்தப்பட்ட கருவூல அலுவலர் (கல்லூரிக் கல்வி இயக்குநர் வழியாக)
நகல்
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு(ட்டி1) துறை, சென்னை–9 .
பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் (ஜி) துறை, சென்னை -9.
அரசு முதன்மைச் செயலாளரின் நேர்முக உதவியாளர், உயர்கல்வித்துறை, சென்னை–9.
இ.கோ./உதிரிகள்.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது//

மே.சுதா
பிரிவு அலுவலர்
1/10/2020

நாள் : 02.02.2021

முதல்வர்
ம. இரா. அரசினர் கலைக்
மன்னார்குடி - 614 00